# மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்

<table>
<tr><td colspan="4">2025–ம் ஆண்டு ஜூலை மாதம் 24–ம் நாள் வியாழக்கிழமை பிரதிவாதி தரப்பு 1–ம் சாட்சியின் வாக்குமூலம் 1869 ம் ஆண்டு சட்ட எண் .44 வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு .சிவா என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்படுகிறது.</td></tr>
<tr><td>பெயர்:</td><td>ராமர்</td><td>தொழில்:</td><td></td></tr>
<tr><td>த.பெ:</td><td></td><td>சமயம்:</td><td></td></tr>
<tr><td>கிராமம்:</td><td></td><td>சாதி:</td><td></td></tr>
<tr><td>வட்டம்:</td><td></td><td>வயது:</td><td></td></tr>
</table>

**24.07.2025 OS.No. 57/2021 பி.வா.சா. 1 ஆஜர்**

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனக்கு பிரதிவாதி என்ன உறவு முறை என்றால் பிரதிவாதி எனது மாமியார் ஆவார். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திற்கு யார் தகவல் சொன்னால் என்றால் பிரதிவாதி எனக்கு சொல்லி நான் நிரூபண வாக்குமூலத்திற்கு விபரம் சொன்னேன் . பி.வா.சா.ஆ.1 –ல் கண்டுள்ள மாரி என்பவருக்கும் வாதிகளின் தகப்பனாருக்கும் அருப்புக்கோட்டை சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.1/2011–ல் வழக்கு நடந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் அங்குள்ள நிலத்திற்கு நடந்திருக்கும் . என்னிடம் காட்டப்படும் பிரதிவாதி எனக்கு எழுதி கொடுத்ததாக நான் சொல்லும் 14.09.2022 ம் தேதியிட்ட பொது அதிகார ஆவணம் பதிவு செய்யப்பட்ட ஆவணமா என்றால் இல்லை. Notary Public செய்யப்பட்டதாகும். என்னிடம் காட்டப்படும் 14.09.2022 ம் தேதியிட்ட பொது அதிகார ஆவணத்திற்கு முன் தேதியில் தாவா சொத்து சம்பந்தமாக நடைபெற்ற விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் காட்டப்படும் வா .சா.ஆ.1 ஆவணமானது தாவா சொத்து உள்ளிட்ட மொத்த சொத்தையும் வாதிகளின் தந்தை ராமகந்தனும் பிச்சை குடும்பனும் சேர்ந்து பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரப்படி கிரையம் பெற்ற ஆவணம் என்றால் சரிதான் . ராமகந்தன் தன் பாகத்திற்கு கிடைத்த தாவா சொத்தை அவரது சகோதரர் என்று நான் சொல்லும் மாரிமுத்து என்பவருடன் சேர்ந்து கூட்டுக் குடும்ப சொத்தாக அனுபவம் செய்து வந்தார் என்று நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதற்கு ஆவணம் ஏதும் நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அது என்ன ஆவணம் என்றால் UDR பட்டா மாரிமுத்து ராமகந்தன் பேரில் உள்ளதை பார்த்துள்ளேன் . நான் தாவா வழக்கிற்காக ராமகந்தனும் மாரிமுத்துவும் தாவா சொத்தை சேர்ந்து அனுபவித்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் , பட்டா உரிமை மூல

ஆவணம் இல்லை என்றாலும் சரியல்ல . ராமகந்தன் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான் . அவருடைய வாரிசுகள் தான் இந்த வாதிகள் என்றால் சரிதான் .தாவா சொத்தை இந்த வாதிகள் கிரையம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான் . என்னிடம் காட்டப்படும் பி .வா.சா.ஆ.1 ஆவணத்தில் வாதிகள் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான் . வாதிகளுக்கும் இந்த பத்திரத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை . பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதி கொடுக்க மேற்படி பத்திரத்தில் கண்ட மாரிமுத்துவிற்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல . பி.வா.சா.ஆ.2 ஆவணமானது தாவா சொத்திற்கு சம்பந்தமான ஆவணமா என்றால் இல்லை . பி.வா.சா.ஆ.1 ஆவணமானது சட்டப்படி செல்லக்கூடிய ஆவணம் என்றாலும் , அதற்கு தொடர்ச்சியாக ஏற்பட்ட பி.வா.சா.ஆ.3 பட்டா மாறுதல் உத்தரவு , பட்டா ஆகியவையும் செல்லக்கூடிய ஆவணம் அல்ல என்றால் சரியல்ல . தாவா சொத்திற்கான புல எண் என்ன என்றால் 57/1A2 ஆகும். பி.வா.சா.ஆ.5 ஆவணமான வில்லங்க சான்று யார் சம்பந்தப்பட்ட சார் பதிவாளர் அலுவலகத்தில் மனு செய்து வாங்கியது என்றால் நான் தான் வாங்கினேன் . என்னிடம் காட்டப்படும் மேற்படி பி .வா.சா.ஆ.5 ஆவணத்தை நான் வாங்கவில்லை என்றாலும் வழக்கிற்காக வாங்கியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல . பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் கண்ட விஜயராமன் த / பெ.அம்மாசி ஓடாத்துூர் என்று கண்டுள்ளது . நான் இல்லை என்றால் சரிதான் . அது என் தகப்பனார் ஆவார் . என்னிடம் காட்டப்படும் பி .வா.சா.ஆ.5 வில்லங்க சான்றானது தாவா சொத்திற்கானது இல்லை என்றால் சரியல்ல . புல எண்.5/2 மட்டும் தாவா சொத்தாகும். பி.வா.சா.ஆ.5 ஆவணம் தாவா சொத்திற்கு சம்பந்தம் இல்லாத ஆவணம் இல்லை என்றால் சரியல்ல . தாவா சொத்தை நாளது தேதி வரை பிரதிவாதி நாகம்மாள் தான் அனுபவித்து வருகிறார் என்பதற்கு நான் ஏதேனும் வரி ரசீதுகள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் சொல்வது போல் தாவா சொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது இல்லை என்றாலும் , பிரதிவாதியின் அனுபவத்தில் தாவா சொத்து இல்லை என்றாலும் சரியல்ல . தாவா சொத்து நாளது வரை வாதிகளின் பாத்தியத்திலும், அனுபவத்திலும் இருந்து வருகிறது என்றால் சரியல்ல . எனக்கு தாவா சொத்து குறித்து எந்த விபரமும் தெரியாது என்றாலும் , பிரதிவாதி எனது மாமியார் என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam